# சுகமாகுதலின் விதிகள்

## அஸ்திபார சத்தியம் தொகுப்பு 3

**பீட்டர் டான்**

© பதிப்பு உரிமை 2008 பீட்டர் டான் சுவிசேஷம். எல்லா உரிமைகளும் முன்பதிவு செய்யப்பட்டவை. பதிப்பாளரின் அனுமதியை வரிவடிவில் பெற்றாலன்றி இப்புத்தகத்தின் எந்த ஒரு பகுதியையும் பிறமொழியாக்கம் செய்யவோ, துண்டு பிரசுரம் செய்யவோ, நகல் எடுக்கவோ, அச்சிடவோ, வேறு எவ்விதத்திலும் பயன்படுத்தவோ கூடாது.

இந்தப் புத்தகத்தின் pdf நகல் ஒன்றின் விலை A$10. விலை கொடுத்த இப்புத்தகத்தை வாங்க முடியாதவர்கள், ஆசீர்வதிக்கப்படவும் ஆவிக்குரிய வாழ்வில் வளரவும், இதை இலவசமாக கொடுக்கிறோம். எங்களது ஊழியம் தொடர்ந்து நடைபெற, உங்களால் முடிந்த பொருளாதார உதவியை நன்கொடையாக அனுப்புங்கள்.

உங்களது நன்கொடைகளை paypal வழியாக elshaddai1@bigpond.comக்கு அனுப்புங்கள். வேறு எந்த வழியிலும் உங்களது நன்கொடைகளை அனுப்ப தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

Peter Tan Evangelism
PO Box 27
Belconnen
ACT 2616, Australia.

Tel.: 00614 17755613
Email: elshaddai1@bigpond.com

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# முகவுரை

அஸ்திபார உபதேசங்களின் தொடர்ச்சியில், முதலாம் தொகுப்பை வாசித்திருப்பீர்கள் என்று நம்புகிறோம். இந்த புத்தகத்தில் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கும் கொள்கைகளைச் செயல்படுத்துவதற்கு முதலாம் தொகுப்பிலுள்ள கொள்கைகளே அஸ்திபாரமாகும்.

சுகமாகுதலைப் பற்றிய பாடம், இந்த புத்தகத்தில் உள்ளதைக் காட்டிலும் அதிக பாடங்கள் தேவைப்படுகிற ஒரு பாடமாகும். சுகமாகுதல் என்ற பாடத்தை முழுவதும் முடிக்க எழுதப்பட்டதல்ல இந்த புத்தகம். சுகமாக்கும் ஊழியத்திலுள்ள முக்கியப் பகுதிகளை நடைமுறை அப்பியாசத்திற்காக வெளிச்சமிட்டு காட்டுவதற்காகவே எழுதப்பட்டது. சுகமாக்கும் ஊழியத்தைக் குறித்து ஒரு கிறிஸ்தவன் இன்னும் படிக்கவும், ஆராய்ச்சி செய்யவும் இது அடிப்படையாக அமையும்.

இந்த புத்தகம் மனதில் சுகம் தேவைப்படுகிறவர்களுக்காகவும், மற்றவர்களுக்கு சுகமாக்கும் ஊழியத்தைச் செய்கிறவர்களுக்காகவும் எழுதப்பட்டது. சுகவீனமான ஒவ்வொரு நபரும் மிகுந்த மனதுருக்கத்தோடு நடத்தப்பட வேண்டும். இயேசுவின் அன்பு உங்களோடு இருப்பதாக.

பாஸ்டர் ***பீட்டர் டான்***

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

# அத்தியாயம் 1

# சுகவீனத்தின் காரணங்கள்

மனிதனுடைய வீழ்ச்சிக்குப் பின்னரே சுகவீனம் ஆரம்பித்தது. தேவன் ஆதாமைப் பார்த்து, விலக்கின அந்த கனியை நீ புசிக்கும் நாளிலே சாகவே சாவாய் என்று குறிப்பாக சொன்னார் (ஆதியாகமம் 2:17). ஆதாமின் கீழ்ப்படியாமையினிமித்தமே பூமியில் மரணம் ஆளுகை செய்தது (ரோமர் 5:17). ஆதாமும் ஏவாளும் பாவம் செய்தபோது, அவர்கள் ஆவி, தேவனுக்கு அந்நியமாக்கப்பட்டது, அவர்கள் மனம் இருளடைந்தது மற்றும் அவர்கள் உடல் குறைபாடுள்ளதாயிற்று (எபேசியர் 4:18; ஆதியாகமம் 2:17).

### *முதுமையடையும் தொடர் நிகழ்வு*

ஆதாம் இந்த விலக்கப்பட்ட கனியைப் புசித்த நாளில் மரணத்தில் மரிப்பான் என்று தேவன் சொன்னார் (ஆதியாகமம் 2:17) என்பதுதான் எபிரேய மொழியின் உண்மையான அர்த்தம் என்று 'யங்' என்பவருடைய வேதத்தின் அட்சரமொழியாக்கம் சொல்லுகிறது. வேறு வார்த்தையில் சொன்னால், ஆவிக்குரிய நிலையில் மரித்துக்கொண்டிருக்கிற ஆதாம், சரீரப்பிரகாரமாகவும் மரிப்பான். ஆதாமுடைய சரீரம் என்றென்றும் வாழும்படியாக வடிவமைக்கப்பட்டது. ஆனால், அவன் பாவத்தில் விழுந்த பின்பு அவனுடைய ஆவி ஆண்டவரிடமிருந்து துண்டிக்கப்பட்டது, அவனுடைய விளங்கிக்கொள்ளுதல் அந்தகாரப்பட்டது, அவனுடைய சரீரத்தில் குறைபாடுகள் தோன்றிற்று. மனித உடலிலுள்ள ஒவ்வொரு தனிப்பட்ட செல்லிலும் குறைபாடுகள் உள்ளது. இதன் விளைவாக, தன்னைப்போல் வேறொன்றை உருவாக்கும் செல்கள், அதைச் சரியாக உருவாக்க முடிவதில்லை. எனவே உருவாக்கப்பட்ட செல்கள் முன்பு உள்ள செல்களைப்போல நன்றாக இருப்பதில்லை. இது ஒலிநாடாக்களை பழைய கால முறைப்படி நகல் எடுப்பதற்கு சிறிது ஒத்திருக்கிறது. அடுத்தடுத்து நகல் எடுக்கும்போது அது முதல் பதிவு செய்த ஒலி நாடாவைப்போல் இருக்காது. செல்கள் திரும்ப திரும்ப உற்பத்தியாகி பெருகும்போது அதிலுள்ள குற்றம் குறைகள் நன்கு தெரிய ஆரம்பிக்கும். இதுவே முதுமையடையும் நிகழ்ச்சி. ஆதாம் பாவம் செய்திருக்காவிட்டால், அவன் இன்னும் ஆயிரக்கணக்கான வருடங்கள் வாழ்ந்திருப்பான். ஆனாலும், அவன் உருவாக்கப்பட்ட நாளிலிருந்ததைப்போல இளமையாகவே இருந்திருப்பான்.

### *சரீரம் காக்கப்படுதல்*

தெசலோனிக்கேயருடைய ஆவி, ஆத்துமா, சரீரம் முழுவதும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து வரும்வரையும் காக்கப்படுவதாக என்று பவுல் ஜெபம்பண்ணினார் (1 தெசலோனிக்கேயர் 5:23). உங்களில் வாசமாயிருக்கிற தம்முடைய ஆவியானவர் உங்கள் சரீரங்களை உயிர்ப்பிப்பார் என்று பவுல் ரோமரில் சொல்லியிருக்கிறர் (ரோமர் 8:11). ஜீவன் என்பதற்கு மூன்று கிரேக்கப் பதங்கள் இருக்கிறது 'பயோஸ்' *(bios)* ஜீவன், 'சுசே' *(psuche)* ஜீவன், மற்றும் 'ஜோயே' *(zoe)* ஜீவன். இவைகள் முறையே சரீர வாழ்வையும், ஆத்தும வாழ்வையும், ஆவிக்குரிய வாழ்வையும் குறிக்கும். நாம் மறுபடியும் பிறக்கும்போது பரிசுத்த ஆவியானவர் நமக்குள் புதிய ஆவியை பிறப்பிக்கச் செய்கிறார் (யோவான் 3:5–7).

ரோமர் புத்தகத்தில் ஆவியானவர் நம்முடைய ஆவிக்கு உயிரளிப்பதை மட்டும் பேசாமல் நம்முடைய இயற்கையான சரீரத்திற்கும் உயிரளிப்பதைப் பற்றியும் பவுல் பேசுவதை கவனிப்போம் (ரோமர் 8:11).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

சரீரத்திற்கு ஏற்கனவே 'பயோஸ்' *(bios)* ஜீவன் இருக்கிறது; இப்பொழுது பரிசுத்த ஆவியானவர் 'ஜோயே' *(zoe)* ஜீவனை நம்முடைய மாம்ச சரீரத்திற்குப் பகிர்ந்து கொடுக்கிறார். பகிர்ந்தளிக்கப்பட்ட 'ஜோயே' *(zoe)* ஜீவனின் மூலம் நம்முடைய மாம்ச சரீரம் அதிகமாகவும், பெரிய அளவிலான ஆரோக்கியத்தையும் பெற்றுக்கொள்ளும். ஆரோக்கியத்திற்கான விதிகளை நாம் இந்தத் தொடர்ச்சியில் உள்ள நான்காம் தொகுப்பில் காண்போம்.

### *எல்லா சுகவீனத்தின் மூலாதாரம்*

பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் குணமாக்குவதற்காக இயேசு பரிசுத்த ஆவியானவரால் அபிஷேகம் பண்ணப்பட்டார் (அப்போஸ்தலர் 10:38). இந்த வசனத்தில் குறிப்பிட்டிருக்கிற பிசாசின் வல்லமையில் அகப்பட்ட யாவரையும் சுகமாக்குதல் என்ற காரியத்திலேயே இயேசுவின் எல்லா அற்புதங்களும், சுகமாக்குதல்களும் வகைப்படுத்தப் பட்டுள்ளன. இது எதைக் குறிக்கிறதென்றால், சாத்தானே நேரிடையாகவோ அல்லது மறைமுகமாகவோ எல்லா சுகவீனத்திற்கும் காரணமாயிருக்கிறான். பிசாசினுடைய கிரியைகளை அழிக்கும் நோக்கத்திற்காகவே இயேசு வெளிப்பட்டார் என்று அப்போஸ்தலனாகிய யோவான் கூறுகிறார் (1 யோவான் 3:8).

எல்லா சுகவீனத்திற்கும் பிசாசிடமிருந்து விடுதலை வேண்டும் என்பதை இது குறிக்க வில்லை. ஆனால், விதிகளை மீறுவதினால் சுகவீனத்திற்கு வழிதிறந்துவிட நேரிடையாகவோ மறைமுகமாகவோ சாத்தான் காரணமாகிறான். காரணமில்லாமலிட்ட சாபம் தங்காது (நீதி. 26:2). எல்லா சுகவீனமும் ஒன்று ஆவி மண்டலத்திலோ (அ) ஆத்தும மண்டலத்திலோ (அ) சரீர மண்டலத்திலோ உள்ள விதிகளை மீறியதால் உண்டான விளைவே என்பதை காணலாம்.

### *ஆவிக்குரிய விதிகளை மீறுதல்*

தேவன் நியமித்த ஆவிக்குரிய விதிகளை மீறுவதால் சில சுகவீனங்கள் உண்டாகின்றன. தாவீது பத்சேபாளுடன் விபச்சாரம் செய்தபோது, சுகவீனத்துக்கான கதவுகளைத் திறந்து விட்டான். பாலுறவு என்பது ஆரோக்கியமற்ற ஒன்று அல்ல. ஆனால், திருமண உறவிற்கு அப்பாற்பட்டு அது இருக்கும்போது தேவனுடைய கற்பனைகளை மீறுகிறதாயிருக்கிறது (யாத்திராகமம் 20:14). தாவீதுக்கு பத்சேபாள் மூலம் பிறந்த முதல் குழந்தை வியாதிப்பட்டு இறந்தது (2 சாமுவேல் 12:15).

யோராம் தன்னுடைய கீழ்ப்படியாமையினாலும், துன்மார்க்கத்தினாலும் சுகவீனத்திற்கு தன் வாழ்வில் கதவைத் திறந்து வைத்தான் (2 நாளாகமம் 21:13–15). அவன் ஒரு வியாதிக் காரனாய் மரித்தான். நாம் பார்த்த இந்தப் பகுதிகளில், பழைய ஏற்பாட்டில் தேவன் சில சுகவீனங்களை அனுப்பினார் என்றால் அது அனுமதிக்கப்பட்ட ஒன்று; அதாவது தேவன் அனுமதித்து பிசாசு கொண்டுவருகிறான் என்பதைக் காணலாம்.

இரண்டாவது சாமுவேல் புத்தகத்தில் தேவன் தாவீதை சோதித்தார் என்று வேதம் சொல்லுகிறது (2 சாமுவேல் 24:1). எனினும் சாத்தான் தான் அதற்கு காரணம் என்று முதலாம் நாளாகமத்தில் வேதம் தெளிவாக சொல்லுகிறது (2 நாளாகமம் 21:1). தேவன் ஏதோ விளையாட்டுக்காக தன் விருப்பம்போல் எதையும் அனுமதிப்பதில்லை என்பதை அறிந்து கொள்வதும் மிக முக்கியமானதாகும். ஒவ்வொரு சுகவீனமான தருணத்திலும், எப்பொழுதும் ஒரு காரணமிருக்கும் (நீதிமொழிகள் 26:2). ஆயினும் எப்போதும் அது ஒரு ஆவிக்குரிய காரணமாயிருக்காது.

ஒவ்வொரு சுகவீனத்திற்கும் ஒரு ஆவிக்குரிய காரணத்தைக் கற்பிப்பதின் மூலம் சில கிறிஸ்தவர்கள் இந்தப் பகுதியில் தவறிவிடுகிறார்கள். இது தேவ வசனங்களுக்கு மாறானது. ஏனென்றால் சுகவீனத்திற்கு இயற்கையான காரணங்களும் இருக்கலாம். இது வரைக்கும் சிலவேளைகளில் சுகவீனத்திற்கு எப்படி ஆவிக்குரிய காரணங்கள் இருக்கலாம் என்று காட்டினோம். இப்பொழுது சுகவீனத்திற்கான வேறு காரணங்களை பரிசீலிக்கலாம்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *ஆத்துமாவின் விதிகளை மீறுதல்*

ஒரு ஆரோக்கியமான சரீரத்திற்கும், சுகவீனமான சரீரத்திற்குமுள்ள வித்தியாசத்தை மனிதர்கள் அறியமுடியும். ஆனால், ஒரு ஆரோக்கியமான ஆத்துமாவிற்கும், ஒரு சுகவீனமான ஆத்துமாவிற்குமுள்ள வித்தியாசத்தை அவர்களால் உணரமுடியாது. அதேனென்றால் ஒரு ஆரோக்கியமான ஆத்துமா எப்படியிருக்கும் என்பதை அளவிட அவர்களுக்கு ஒரு அளவும் இல்லை. அதே நேரத்தில் ஒரு ஆரோக்கியமான சரீரம் எப்படியிருக்கும் என்பது அவர்களுக்குத் தெரியும்.

ஒரு ஆரோக்கியமான ஆத்துமா, அன்பினாலும் சந்தோஷத்தினாலும் சமாதானத்தினாலும் நிறைந்திருக்கும். வாழ்க்கையில் ஒரு நேர்மறையான அணுகுமுறை இருக்கும். இதற்கு எதிர்மறையானது வெறுப்பு, சுயநலம், கவலை, பயம் மற்றும் மனச்சோர்வுகளாகும். ஆத்துமா கவலையோடும் மனச்சோர்வோடும் இருக்கும்படி தேவன் அதை வடிவமைக்கவில்லை. கவலையும் பயமும் மனிதனின் வீழ்ச்சிக்குப் பின்பே வந்தது (ஆதியாகமம் 3:10, 16).

ஒரு ஆரோக்கியமான ஆத்துமா ஒரு ஆரோக்கியமான சரீரத்திற்கு வழிநடத்தும் (அ) காரணமாகும் (3 யோவான் 2). யோபு எந்த ஆவிக்குரிய விதிகளையும் மீறவில்லை. ஆனால், அவன் பயம் நிறைந்த மனிதனாயிருந்தான் (யோபு 3:25, 26). மனமகிழ்ச்சி நல்ல ஔஷதம் (நீதிமொழிகள் 17:22). கர்த்தருக்குள் மகிழ்ச்சியாயிருப்பதே நம்முடைய பெலன் (நெகேமியா 8:10). இன்று மருத்துவர்கள் சில வியாதிகள் 'சைகோசொமேட்டிக்' என்று உணருகின்றனர். அதாவது உடலில் எந்தக் கோளாறும் இல்லாமல் மனதளவில் பாதிக்கப்பட்டதினால் வரும் நோய்கள்.

என் தனிப்பட்ட வாழ்வில் நான் கற்றுக்கொண்ட பாடம் ஒன்று உண்டு. நல்ல கண் பார்வைக்காக தேவனை விசுவாசித்துக் கொண்டிருந்தபோது, பார்வைக் குறைபாட்டிற்கும், மனக்கவலைக்கும் உள்ள தொடர்பைக் கண்டுபிடித்தேன். துயரத்தினால் என் கண்கள் குழிவிழுந்துபோயிற்று (சங்கீதம் 6:7) என்று தாவீது கூறுகிறார். ஈசாக்கு ஏசாவினிமித்தம் மனநோவாயிருந்தான் (ஆதியாகமம் 26:35). அடுத்ததாக, அவன் கண்கள் இருளடைந்து பார்வையற்று போயிருந்தான் என்று வாசிக்கிறோம் (ஆதியாகமம் 27:1).

இருந்தாலும், எல்லா பார்வைக்குறைவு பிரச்சனையும் கவலையினால் வருகிறது என்ற முடிவுக்கு வருவது முட்டாள்தனம். ஆயிரக்கணக்கான காரணங்களில், மனதிலுள்ள கவலையும் ஒன்று. சில கிறிஸ்தவர்கள் எல்லா மூட்டு வலி பிரச்சனைக்கும் மற்றவர்களை மன்னிக்காததே காரணம் என்று முடிவு செய்கின்றனர். ஆனால், வேறு அநேக காரணங்களும் உள்ளன என்பதை உணராமல் இருக்கின்றனர். எல்லா வலிப்பு நோய்களும் பிசாசினால் உண்டானதல்ல. தங்கள் கணவன்மார்களின் விபசாரத்தைக் கண்டு பிடித்ததினால் மனநோயினாலும், தற்கொலை எண்ணத்தினாலும் பாதிக்கப்பட்ட அநேக போதகரின் மனைவிகளுக்கு நான் ஊழியம் செய்திருக்கிறேன். அவர்கள் வலிப்பு நோயினாலும் பிசாசினாலும் பாதிக்கப்பட்டவர்கள் போலிருந்தார்கள். அவர்களுக்குத் தேவைப்பட்டது உள்ளான சுகமே.

சில வியாதிகள் ஆத்துமா அதாவது மனம் சம்மந்தப்பட்டிருப்பதால், அவை மருத்துவ சிகிச்சைக்கு அப்பாற்பட்டன. இந்த நிலையில் மருத்துவ சிகிச்சை, நோயின் அறிகுறிகளைத் தற்காலிகமாக நீக்குகிறது. ஆனால், உடனடியாகவோ அல்லது காலந்தாழ்த்தியோ வேறே சரீர பிரச்சனைகள் ஆரம்பித்துவிடுகின்றன. ஏனெனில் அந்த ஆத்துமா சுகவீனமாயிருக்கிறது. திமிர்வாதக்காரனுக்கு சரீர சுகத்தையளிக்கும் முன்பு, இயேசு அவனுக்கு மன்னிப்பை அளித்தார் (மாற்கு 2:5). இருதயம் நருங்குண்டவர்களைக் குணமாக்கவும் பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகம் அருளப்படுகிறது (லூக்கா 4:18).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## *இயற்கை விதிகளை மீறுதல்*

நாம் மறுபடியும் பிறந்துவிட்டோம், ஆவிக்குரியவர்களாயிருக்கிறோம் என்பதற்காக, சரீரம் சம்மந்தப்பட்ட இயற்கைவிதிகளை புறக்கணித்து அலட்சியம் செய்யலாம் என்பது அர்த்தமல்ல. ஆவிக்குரிய வேலைகளை முடிப்பதற்காக, ஆரோக்கியத்திற்கான இயற்கை விதிகளை மீற, பரிசுத்த ஆவியானவர் தேவசித்தப்படி அவ்வபோது அனுமதியளிப்பார். மோசே நாற்பது நாட்கள் இரவும் பகலும் அப்பம் புசியாமலும், தண்ணீர் குடியாமலுமிருந்தார் (உபாகமம் 9:9). கானானியரை முறியடித்துக் கொண்டிருக்கையில், யோசுவாவும் இஸ்ரவேலர்களும் இன்னுமொரு நாள் தூங்காமல் தொடர்ந்து யுத்தம்பண்ணினார்கள் (யோசுவா 10:13). ஆயினும் இவைகளெல்லாம் சாதாரணமான நிகழ்வுகள் அல்ல, விதிவிலக்கானவைகளே.

எப்பாப்பிரோதீத்து அதிகமாய் வேலை செய்ததினால் வியாதிப்பட்டான் என்பது தெளிவாகிறது (பிலிப்பியர் 2:27, 30). அவன் இயற்கையின் விதிகளான தூக்கத்தையும் இளைப்பாறுதலையும் அலட்சியம் பண்ணினான். தீமோத்தேயுவுக்கு இருந்த வயிற்று பிரச்சனை, ஆவிக்குரிய தல்ல இயற்கையானது என்ற பவுல் உணர்கிறார். ஆகவே, அவருக்கு நேரிடுகிற பலவீனங்களுக்காக கொஞ்சம் திராட்சரசம் கூட்டிக்கொள்ளும்படி பவுல் அறிவுறுத்துகிறார் (1 தீமோத்தேயு 5:23). வேறுவிதமாகச் சொன்னால், தன்னுடைய வயிற்றுப் பிரச்சனைக்கு தீமோத்தேயுவை சரீரப் பிரகாரமான கவனம் செலுத்தமாறும் பவுல் சொல்லுகிறார்.

எனவே சுகவீனம் என்பது ஆவிக்குரிய பாவத்தின் விளைவால் மாத்திரம் வருவதில்லை. ஆத்துமா, இயற்கை உலகம் ஆகியவற்றின் விதிகளை மீறுவதாலும் வருகிறது என்பதை நாம் இதுவரை பார்த்தோம். யோவான் சுவிசேஷத்தில், ஒரு மனிதன் ஏன் குருடனாயிருக்கிறான் என்று இயேசுவிடம் சீஷர்கள் கேட்டபோது, எல்லா சுகவீனத்திற்கும் பாவமே காரணம் என்று அதிக எளிமையாக்க முயற்சி செய்கிறார்கள் (யோவான் 9:2). ஒரு கிறிஸ்தவன் கார் விபத்துக்குள்ளாகும்போது, கண்டிப்பாக அவர் ஆவிக்குரிய மீறுதலைச் செய்திருப்பார் என்பது அவசியம் அல்ல. சிலவேளைகளில் கவலையீனமாக வண்டியை ஓட்டியதினாலும் இருக்கலாம், அல்லது வேகமாக ஓட்டியதினாலும் இருக்கலாம், அல்லது போக்குவரத்து விதிகளை மீறியதினாலும் இருக்கலாம் அது முற்றிலும் ஒரு இயற்கையான காரணமாக இருக்கலாம்.

அவ்வண்ணமாகவே ஒரு மனிதன் வியாதிப்படும்போது அதற்கு எப்போதும் ஒரு காரணம் இருக்கும். ஆயினும் எப்போதும் ஆவிக்குரிய மீறுதல் ஒரு காரணமாயிருப்பதில்லை. அது ஆத்தும, சரீர விதிகளை மீறியதாலும் இருக்கலாம். ஆச்சரியப்படும் உண்மை என்னவென்றால், எந்தக் காரணமானாலும், இயேசு தம்முடைய கிருபையின்படியும் இரக்கத்தின்படியும் பூரண சுகத்தையும் ஆரோக்கியத்தையும் நமக்கு கொடுக்க முடியும்.

இயேசுகிறிஸ்துவின் கிருபையால் சுகத்தைப் பெற்றபின்னர், ஆவிக்குரிய மற்றும் மனம் அல்லது சரீரம் சார்ந்த காரணங்கள் எதுவானாலும் அதன் வேர் களையப்பட்டால் மாத்திரமே, நிலையான சுகத்தையும், ஆரோக்கியத்தையும் நம்மால் தக்க வைத்துக்கொள்ள முடியும். இயேசு அந்தப் பக்கவாத மனிதனை சுகப்படுத்தின பின்பு அவனிடம் அதிக கேடானதொன்றும் உனக்கு வராதபடி இனி பாவம் செய்யாதே என்றார் (யோவான் 5:14).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

### *அத்தியாயம் 2*

# புதிய உடன்படிக்கையின் கீழ் சுகமளித்தல்

கிறிஸ்தவர்கள் சுகமாக்குதலை சந்திப்பதைக் குறித்து மூன்று முக்கிய கருத்துக்கள் கிறிஸ்தவத்தில் உள்ளன. முதலாவது, அப்போஸ்தலர்கள் காலத்தோடு சுகமாக்குதலும் முடிந்துவிட்டது என்பதாகும். இது அவிசுவாசத்தினால் வந்தது. இரண்டாவது கருத்து என்னவென்றால் சிலரை சுகமாக்குவது தேவனுடைய சித்தம், மற்றவர்களைச் சுகமாக்குவது அவருடைய சித்தமல்ல என்பதாகும். இது அனுபவத்தினால் பெற்றது. இந்தக் கருத்தை உடையவர்கள், தங்கள் அனுபவத்திலிருந்தும் தங்களுக்குத் தெரிந்தவர்களின் அனுபவத்தில் இருந்தும் நிரூபிக்க முயலுவார்கள். கூட்டங்களில் ஒரு சிலரே சுகமாக்கப்படுவதை அவர்கள் எப்பொழுதுமே கண்டிருக்கிறார்கள்.

### *சுகமாக்குதலில் தேவனுடைய சித்தம்*

இரண்டாவது கருத்து, இயேசுவின் ஊழியத்தில் வந்த எல்லாரும் சுகமாக்கப்பட்ட உண்மையைப் புறக்கணிக்கிறது (மத்தேயு 4:23; லூக்கா 6:19). உன்னை சுகமாக்குவது எனது சித்தமில்லை என்று எந்த ஒரு சுகவீனமான மனிதனையும் பார்த்து இயேசு சொன்னதாக நாம் பார்க்கவில்லை. மாறாக, தேவனால் தன்னை சுகப்படுத்த முடியும், ஆனால் அது அவருக்கு சித்தமா என்று நிச்சயமில்லாத குஷ்டரோகியைப் பார்த்து, "எனக்கு சித்தமுண்டு சுத்தமாகு", என்று இயேசு சொன்னார் (மத்தேயு 8:2, 3).

சிலரை சுத்தமாக்குவது தேவனுடைய சித்தமல்ல என்று சொல்பவர்கள், தாங்கள் சுகவீனமாய் இருப்பதும் தேவ சித்தம் என்று தங்களை அறியாமலேயே சொல்கின்றனர். மனிதனின் முக்கியமான அடிப்படைத் தேவைகளுக்கு இது எதிரானது. எந்த உலகப் பிரகாரமான தகப்பன் தன் சொந்தப் பிள்ளைகள் சுகவீனமாயிருப்பதை விரும்புவான்? எந்த ஒரு மனிதன் தான் சுகவீனமாயிருக்கும்போது, சுகமடைய தனக்குத் தெரிந்த வழிகளைத் தேடாமல் இருப்பான்? தேவனுடைய சித்தத்திலிருப்பதற்காக, வியாதியாயிருப்பதை தன் வாழ்க்கையின் இலக்காக யாரும் வைப்பார்களா? நன்றாக இருப்பதும், ஆரோக்கியத்துடன் இருப்பதும் மனுக்குலத்தின் முக்கியமான, இயற்கையான, அடிப்படை விருப்பமாகும்.

### *இரண்டாம் கருத்தின் நிலையற்ற தன்மை*

தாங்கள் சுகவீனமாயிருப்பது தேவ சித்தம் என்று நம்பும் கிறிஸ்தவர்கள், தேவ சித்தத்தை மீறி, சுகமடையும்படி மருத்துவர்களை முதலாவது நாடிப் போகக்கூடாது. உண்மையாக நடப்பது என்னவென்றால் அப்படிப்பட்ட கிறிஸ்தவர்கள், சுகமடையும்படி தங்களுக்குத் தெரிந்த நல்ல வழிகளைத் தேடுகிறார்கள். தங்களுக்குத் தெரிந்த எல்லா முறைகளிலும் முயற்சித்தும், முன்னேற்றம் இல்லாவிட்டால், இது தேவசித்தமாகத்தான் இருக்கும் என்ற முடிவுக்கு வந்து விடுகின்றனர்.

சிலரை சுத்தமாக்குவது தேவசித்தம் என்றும் சிலரை சுத்தமாக்குவது தேவ சித்தமல்லவென்றும் கிறிஸ்தவர்கள் நம்பும்போது, நீங்கள் சுகமாவது தேவ சித்தமல்ல என்று சாத்தான் வந்து அவர்களிடம் சொல்லுவான். சிலரை இரட்சிப்பது தேவசித்தம் என்றும் மற்றவர்களை இரட்சிப்பது தேவ சித்தமல்லவென்றும் கிறிஸ்தவர்கள் நம்பும்போது சாத்தான் அவர்களிடம் வந்து, நீங்கள் இரட்சிக்கப்படுவது தேவ சித்தமல்லவென்று சொல்லுவான். இந்த கருத்தையுடைய போதகர்கள்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தங்களுடைய இறையியலை அனுபவத்தின் மீது கட்டுகிறார்கள்; இது ஆரோக்கியமான உபதேசங்களை உருவாக்க ஆரோக்கியமான வழி அல்ல.

### *தேவனுடைய சிட்சிப்பு*

இந்த இரண்டாவது கருத்தையுடைய அதே கிறிஸ்தவர்கள், சுகவீனமாயிருப்பது தேவனுடைய சிட்சிப்பின் ஒரு பகுதி என்று கருதுகிறார்கள். வேறு வார்த்தையில் சொன்னால், நம்முடைய ஆவிக்குரிய நன்மைக்காக தேவன் நமக்குப் பல பாடங்களைக் கற்றுக்கொடுக்கிறார். எந்த உலகப்பிரகாரமான தகப்பன், பாடம் கற்றுக்கொடுப்பதற்காக தன் பிள்ளையை சுகவீனமாக்குவன்? மனிதர்களுக்கு சில பாடங்களைக் கற்றக்கொடுப் பதற்காக ஒருவர் அவர்களுக்கு சுகவீனத்தை வருவிப்பாரானால், இயற்கை மற்றும் சமூக விதிகளின் படி அவர் ஒருவேளை சிறையிலடைக்கப்படுவார். எந்த உலகப்பிரகமான தகப்பன் தன் பிள்ளைகளுக்கு நெருப்பின் அபாயத்தைக் கற்றுக்கொடுக்க தன் பிள்ளையை எரிப்பான்? சிலதடவை நெருப்பில் சுட்டுக்கொள்ளும்போது அந்தக் குழந்தை சந்தேகத்துக்கிடமின்றி நெருப்பின் அபாயத்தைக் கற்றுக்கொள்ளும். ஆனால், ஒரு குழந்தைக்கு பாடங்கற்பிக்க இது ஆரோக்கியமான முறையா?

சிலர் சுகவீனமாயிருக்கும்போது தேவனுக்கு பக்கத்தில் சேர்க்கப்படுகிறார்கள் என்று கருதுகின்றனர். அப்படியானால் மருத்துவமனையில் உள்ள எல்லா நோயாளிகளும் ஏன் தேவனுக்கு பக்கத்தில் வருவதில்லை? உண்மையாகச் சொல்லப்போனால் அநேகர் தேவனை விட்டு தூரந்தான் போகின்றனர். ஏனெனில், ஆண்டவர்தான் அவர்களுக்கு வியாதியைக் கொடுத்தார் என்று நினைக்கிறார்கள். தேவனுக்கு பக்கத்தில் சேரும்படி இயேசு எப்படி வியாதிப்படாமலிருந்தார்? அப்படியானால் சுகவீனம் ஏன் ஆசீர்வாதமாகக் கருதப்படாமல், சாபமாகக் கருதப்படுகிறது? (உபாகமமம் 28:15, 58–61).

'சிட்சிப்பு' என்னும் வார்த்தையின் கிரேக்கப்பதம் 'பைடியோ' என்பதாகும். தேவன் நம்மை சிட்சிக்கிறார் (எபிரெயர் 12:6,7,10; வெளி. 3:19). ஆயினும் அவர் நம்மை சிட்சிக்கும் கருவி வியாதியல்ல. ஆனால், அவருடைய வார்த்தையே (சங்கீதம் 94:12). வேத வாக்கியங்கள் உபதேசத்துக்கும், கடிந்துகொள்ளுதலுக்கும், சீர்திருத்தலுக்கும், நீதியைப் படிப்பிக்குதலுக்கும், (அ) சிட்சித்தலுக்கும் பிரயோஜனமுள்ளவைகளாயிருக்கிறது என்று பவுல் தீமோத்தேயுவுக்கு சொல்லுகிறார் (2 தீமோத்தேயு 3:16 நீதியை படிப்பித்தல் – 'பைடியோ'). பவுல் கொரிந்திய சபைக்கு சீர்திருத்தலைக் கொண்டுவரும்போது, அவர்கள் சுகவீனமடைய ஜெபிக்காமல் தேவ வார்த்தையிலிருந்து ஆரோக்கிய உபதேசமாக கடிதங்களை எழுதினார் (2 கொரிந்தியர் 7:8–11).

### *சுகவீனமுள்ளவர்களுக்காக மனதுருக்கத்தை வளர்த்துக்கொள்ளுதல்*

இரண்டாவது கருத்தையுடைய கிறிஸ்தவர்கள், தாங்கள் சுகவீனமாயிருப்பதினால், மற்றவர் களுக்காக, மனதுருக்கத்தோடு ஜெபிக்க முடியும் என்று சொல்லிக்கொள்ளுகிறார்கள். ஏனெனில், சகவீனமாயிருப்பதென்பது என்னவென்று எங்களுக்குத் தெரியும் என்கிறார்கள். ஆரோக்கியமில்லாத இந்த இறையியலை நாம் பின்பற்றுவோமானால், இழந்துபோனவர்களை இரட்சிக்க, நாமும் இழந்துபோக வேண்டிவரும். விபசாரக்காரர்கள் மீது மனதுருக்கம் வர நாமும் விபசாரம் செய்யவேண்டி வரும். போதை பழக்கத்துக்கு அடிமையானவர்கள் மீது மனதுருக்கம் வர நாமும் போதை பொருட்களை எடுக்க வேண்டி இருக்கும். குடிகாரர்கள் மேல் மனதுருக்கம் வர நாமும் குடிக்க வேண்டியதாகும். இது ஒரு ஆரோக்கியமற்ற கருத்து என்பது தெளிவாகிறது. இயேசுகிறிஸ்து ஒருபோதும் சுகவீனமாயிருந்ததில்லை. ஆனாலும் அவர் வியாதியஸ்தர்கள் மேல் மனதுருகினார் என்பது வியப்படையச் செய்கிறதல்லவா?

நம்முடைய இருதயத்தில் தேவ அன்புக்கு இணங்குவதன் மூலம் மனதுருக்கம் வருகிறது. அது தேவ பிரசன்னத்தில் நேரம் செலவிடுவதின் மூலமும், மக்களை ஆண்டவர் பார்ப்பதுபோல்

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பார்பதினாலும் வருகிறது. பரிசுத்த ஆவியானவரை உணரக்கூடியவர்களாகவும், அவருக்கு இணங்குகிறவர்களாகவும் இருப்பது பெரிய மனதுருக்கத்தை நம்முடைய வாழ்வில் உண்டாக்கும்.

*சுகமாக்குதலைக் குறித்த மூன்றாம் கருத்து*

மூன்றாவது கருத்து என்னவெனில், எல்லாரையும் சுகமாக்குவது தேவனுடைய சித்தமாகும். இந்த மூன்றாம் கருத்து வசனங்களின் அடிப்படையிலானது. அனுபவத்தின் மூலம் நாம் உணரக்கூடியது என்னவென்றால், சுகமளிக்கும் கூட்டங்களுக்கு வருகிற எல்லாரும் சுகம் பெறுவதில்லை. ஆனால், நம்முடைய இறையியலை இந்த அனுபவத்தின் அடிப்படையில் உருவாக்கக் கூடாது. எழுதப்பட்ட தேவ வார்த்தையின் அடிப்படையிலேயே நம்முடைய இறையியல் உருவாக்கப்பட வேண்டும். நாம் தொடர்ந்து தேவ வார்த்தையை விசுவாசித்து அறிக்கையிடுவோமானால், இந்தக் கடைசி நாட்களில் கிறிஸ்துவின் சரீரமாகிய சபை எல்லா வசனங்களும் நிறைவேறுகிறதை அனுபவிக்கும் காலம் வரும்.

அப்போஸ்தலர்களின் வாழ்நாட்களில் எல்லாரும் சுகம் பெற்ற நேரங்கள் உண்டு (அப்போஸ்தலர் 5:16). இயேசு தன்னுடைய ஊழியத்தில், தன்னிடம் வந்த எல்லாரையும் சுகமாக்கினார். அவர் செய்கிற கிரியைகளை நாமும் செய்யலாம், அதைவிட பெரிய கிரியைகளையும் செய்யலாம் (யோவான் 14:12) என்று இயேசு சொன்னார். இயேசுவின் சுவிசேஷத்தில் சுகமளித்தல் ஒரு முக்கியமான பங்கு (மாற்கு 16:15—18; அப்போஸ்தலர் 10:38). சுகமளிக்கும் ஊழியம், சபை ஊழியத்தின் ஒரு தொடர்ச்சியான பகுதி (யாக்கோபு 5:14).

*பழைய ஏற்பாட்டில் சுகமாகுதல்*

இஸ்ரவேல் மக்களுக்கு, தேவனோடுள்ள உடன்படிக்கையின் பயன்களாக சுகமும், ஆரோக்கியமும் இருந்தது. தேவனுடைய கற்பனைகளுக்கும், சத்தத்திற்கும் கீழ்படிவதின் இயற்கையான பலனாக அது இருந்தது (யாத்திராகமம் 15:26; உபாகமம் 28). சுகவீனம் ஒரு சாபமாக வகைப்படுத்தப்பட்டது, இந்நிலையிலிருந்து தேவ மக்கள் விடுதலையாக்கப்பட வேண்டியிருந்தது (உபாகமம் 28:15).

பதினெட்டு வருடமாகக் கட்டப்பட்டிருந்த ஒரு பெண்ணை ஓய்வுநாளில் சுகமாக்கினதைக் குறித்து பரிசேயர்களின் கேள்விக்கு, இவள் ஆபிரகாமின் குமாரத்தியாயிருப்பதினால் சுகமாக்கப்பட வேண்டியவள் (லூக்கா 13:16) என்று இயேசு பதிலளித்தார். தன்னுடைய மகளின் விடுதலைக்காக கேட்ட புறஜாதி ஸ்திரீக்கு, அவள் கேட்டது பிள்ளைகளின் அப்பம் என்று இயேசு குறிப்பாய் கூறினார் (இஸ்ரவேலரின் உடன்படிக்கை உரிமை) (மத்தேயு 15:24—26).

சுகமாகுதல், பழைய உடன்படிக்கையில் இருந்தபோதிலும், அதில் இருந்த வாக்குத்தத்தங் களை தங்களுக்காக உரிமைபாராட்டாதிருந்த அநேக மக்களும் பழைய உடன்படிக்கையின் நாட்களில் இருந்தார்கள். குஷ்டரோகிகள் இருந்தார்கள், இராஜாக்கள் கூட சுகவீனமாய் இருந்தார்கள். ஆசா இராஜா வியாதிப்பட்டிருக்கும்போது தேவனுடைய உடன்படிக்கையில் சுகத்தைத் தேடாமல், வைத்தியர்களை தேடினான் (2 நாளாகமம் 16:12). இஸ்ரவேலர்களிடம் குறைவுகள் காணப்பட்டபோதிலும், வியாதியை அவர்கள் நடுவிலிருந்து விலக்குவேன் என்று பழைய உடன்படிக்கையில் தேவன் வாக்குப்பண்ணியிருந்தார் (யாத்திராகமம் 23:25; உபாகமம் 7:15).

பழைய ஏற்பாட்டில் வாழ்ந்த யாராவது ஒருவர் தன்னை சுற்றியுள்ள சுகவீனமுள்ளவர்களைப் பார்த்து, எல்லாரையும் சுகப்படுத்துவது தேவ சித்தமல்லவென்று வாதிட்டிருக்க முடியும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

அது சுகமாகுதலின் இரண்டாவது கருத்து சொல்வதைப் போலவே, சூழ்நிலைகளைப் பார்த்து விவாதிப்பதாயிருந்திருக்கும். புதிய உடன்படிக்கையை இன்னும் கருத்தில் கொள்ளாமல், வெறும் பழைய உடன்படிக்கையே ஒருவரும் சுகவீனமாய் இருப்பதும் தேவ சித்தமல்லவென்று கண்டிப்பாக சொல்லுகிறது. உடன்படிக்கையின் வாக்குத்தத்தங்கள் தானாய் வருவது அல்ல. பழைய உடன்படிக்கையிலேயே அவைகள் உரிமைபாராட்டப்பட வேண்டும். அவருடைய மக்களைக் குறித்த தேவனுடைய பூரண சித்தம் பழைய உடன்படிக்கையில் என்னவென்றால், அவர்கள் வியாதி இல்லாமலிருக்க வேண்டும் என்பதே. எல்லாருக்கும் பூரண ஆரோக்கியமே அவரது சித்தமாகும்.

### *புதிய உடன்படிக்கையில் சுகமாகுதல்*

புதிய உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையின் நன்மைகளை ரத்து செய்வதல்ல என்பதை நினைவில் கொள்வது அவசியமாகிறது, மாறாக பழைய உடன்படிக்கையின் நன்மைகளை நிறைவேற்றுவதே புதிய உடன்படிக்கை. நியாயப்பிரமாணத்தை அழிக்க அல்ல அதை நிறைவேற்றுவதற்கே வந்தேன் என்று இயேசு சொன்னார் (மத்தேயு 5:17–19). சிலுவையில் "எல்லாம் முடிந்தது" என்று இயேசு கதறினபோது, திரைச்சீலை கிழிந்தது, நியாயப்பிரமாணத்தின் மூலம் வரவேண்மடிய நன்மைகள் எல்லாம் இப்பொழுது கிருபையின் மூலம் நமக்கு வருகிறது – கிறிஸ்து செய்து முடித்த கிரியைகளின் மூலம்.

புதிய உடன்படிக்கை, பழைய உடன்படிக்கையின் நன்மைகளை நீக்கிவிடவில்லை. பழைய உடன்படிக்கையின் முறைகளை மட்டுமே அது நீக்கியிருக்கிறது. புதிய உடன்படிக்கையில், பழைய உடன்படிக்கையின் எல்லா நன்மைகளையும் நம்மால் எளிதாகப் பெற்றுக்கொள்ள முடியும். பழைய உடன்படிக்கையின் ஒவ்வொரு தேவையையும் கிறிஸ்து நமக்காக நிறைவேற்றியிருக்கிறார். புதிய ஏற்பாட்டில், சுகமாகுதல் இனிமேல் நியாயப்பிரமாணத்தின் மூலமல்ல, சுகமாகுதல் இப்பொழுது கிருபையின் மூலமே.

இந்தக் காரணத்திற்காக, சுகமளித்தல் என்பது சுவிசேஷ செய்தியின் ஒரு பகுதியாகும் (சுவிசேஷம் என்பது நல்ல செய்தி). பாவமன்னிப்பிற்கும், சுகமாக்குதலுக்கும், மனுக் குலத்தின் ஒவ்வொரு தேவைகளுக்கும் இயேசுகிறிஸ்துவின் கிருபையை பிரகடணப் படுத்தவே நாம் அனுப்பப்படுகிறோம். சுகமளித்தல் உண்மையாக, ஒரு எதிர்காலத்தைச் சேர்ந்தது அல்ல. அது கடந்த காலம். கிறிஸ்துவில் முடிவடைந்த வேலைகள். இயேசு நம்முடைய பெலவீனங்களை ஏற்றுக்கொண்டு நம்முடைய நோய்களைச் சுமந்தார் என்று புதிய உடன்படிக்கை சொல்லுகிறது (மத்தேயு 8:17).

### *இயேசுவே, அந்த புதிய உடன்படிக்கை*

இயேசு வியாதியஸ்தர்களுக்கு ஊழியம் செய்தபோது, அவர் ஜெபித்ததாகவோ, சுகப் படுத்தும்படி தேவனை கேட்டதாகவோ எங்கும் பார்க்க முடியாது. அவர் ஒரு வார்த்தையினால் கட்டளை கொடுத்தார், தன் கைகளினால் தொட்டார், வியாதியஸ்தர்கள் சுகமடைந்தார்கள். இயேசுகிறிஸ்து பழைய உடன்படிக்கையின் தேவைகளை நிறைவேற்றி விட்டதால், தேவன் தம்முடைய மக்களுக்கென்று வைத்துள்ள உடன்படிக்கையின் நன்மைகளின் உருவகமாய் அவரே மாறினார். உண்மையாகச் சொல்லப்போனால் இயேசுவே அந்த புதிய உடன்படிக்கை. கர்த்தருடைய பந்தியில் அந்த பாத்திரம் அவர் இரத்தத்தையும், அப்பம் அவருடைய சரீரத்தையும் குறிக்கிறதென்று அவர் சொன்னார் (லூக்கா 22:19,20).

அப்படியானால் அந்த புதிய உடன்படிக்கை என்ன? புதிய உடன்படிக்கை என்பது பழைய உடன்படிக்கையின் சகல ஆசீர்வாதங்களும் நன்மைகளுமாகும்; இது மனிதனால் அடையக் கூடாமலிருந்தது. ஆனால், இப்பொழுது இயேசுகிறிஸ்துவின் இரத்தக் கிரயத்தைக் கொண்டு

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

இலவசமாய்க் கொடுக்கப்படுகிறது. நாம் புதிய உடன்படிக்கையைப் பெற்றுக்கொள்ளும் போது, பழைய உடன்படிக்கையின் ஆசீர்வாதங்களையும், நன்மைகளையும் மட்டுமல்ல இயேசுவின் ஜீவனையும், ஆள்தத்துவத்தையும் சேர்த்துப் பெற்றுக் கொள்ளுகிறோம். ஏனெனில் புதிய உடன்படிக்கை என்பது எழுத்துக்களினாலாகிய புத்தகம் அல்ல. ஆனால், அவர் ஒரு ஆள் – இயேசு கிறிஸ்து என்னும் நபர்.

### *சுகத்தை உரிமையுடன் சொந்தமாக்கிக்கொள்வது*

புதிய உடன்படிக்கையில் சுகத்தை சொந்தமாக்கிக் கொள்ள விரும்பும் ஒருவர், இனி நியாயப்பிரமாணத்தின் மூலம் எடுத்துக்கொள்ள முடியாது. அது பழைய உடன்படிக்கையின் முறைமை. புதிய உடன்படிக்கையில் சுகத்தை சொந்தமாக்கிக்கொள்ள விரும்புகிறவர்கள், கிரியையின் மூலமாக அல்ல, இயேசுகிறிஸ்துவிலுள்ள விசுவாசத்தின் மூலமும் கிருபையின் மூலமுமே சொந்தமாக்கிக்கொள்ள முடியும். புதிய உடன்படிக்கையில், எந்த அப்போஸ்தலரும் சுகத்திற்காக தேவனிடத்தில் ஜெபிக்கவில்லை. அவர்கள் இயேசுவின் நாமத்தில் சுகத்தைக் கட்டளையிட்டார்கள். சுகம், கிருபையின் மூலம் இலவசமாய் கொடுக்கப்படவேண்டிய சுவிசேஷத்தின் ஒரு பகுதி.

“அவரிடமிருந்ததை அவர் இயேசுவின் நாமத்தினாலே தந்தார்” என்று பேதுரு சொல்லுகிறார் (அப்போஸ்தலர் 3:6). இயேசுவின் மேலுள்ள விசுவாசத்தின் மூலமே அந்த மனிதனுக்கு சுகத்தைக் கொடுக்க முடிந்தது என்று அவர் பின்பு விளக்குகிறார் (அப்போஸ்தலர் 3:16). அங்கு ஜெபம் ஏறெடுக்கப்படவில்லை. பேதுருவின் பகுதியில் எந்த கெஞ்சுதலும் இல்லை. தேவைப்பட்டது எல்லாம், இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசத்தின் மூலம் கிருபையை கட்டவிழ்ப்பதே.

பவுல் சுவிசேஷத்தைப் பிரசங்கிக்கும் போது கூட்டத்தில் சப்பாணி ஒருவன் இருந்தான். இயேசுகிறிஸ்துவின் கிருபையுள்ள சுவிசேஷத்தைக் கேட்டபோது, அவன் இருதயத்தில் விசுவாசம் உதித்தது. பவுல் ஒரு கட்டளை கொடுத்தார், அந்த மனிதன் சுகமானான் (அப்போஸ்தலர் 14:8–10). எந்த ஜெபமும் செய்யப்படவில்லை. இயேசு கிறிஸ்துவின் கிருபையுள்ள சுவிசேஷத்தில் இருந்த விசுவாசம் மாத்திரமே.

புதிய உடன்படிக்கையில் எல்லா சுகமும், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் கிருபையிலிருந்தே பிறக்கிறது. எல்லா ஐந்து வகை ஊழியங்களும், அதோடு சேர்ந்த அபிஷேகமும், சுகமாக்கும் வரங்களும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையின் பலனே ஆகும் (எபிரெயர் 4:7). பூரண கிருபை பெருகும்போது பூரண வல்லமையும் பெருகும் (அப்போஸ்தலர் 4:33). எல்லா மனிதரும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

# அத்தியாயம் 3

# விசுவாசத்தின் முக்கியத்துவம்

எல்லா சுகமளித்தலும் நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் கிருபையின் மூலமே என்பதை விளங்கிக் கொண்டபின்பு, விசுவாசத்தின் மூலமே கிருபையை சொந்தமாக்கிக் கொள்ள முடியும் என்பதை விளங்கிக் கொள்வது அவசியமாகிறது. பவுல் கலாத்தியருக்கு எழுதுகையில், நியாயப்பிரமாணத்தின் கிரியைகளையும், விசுவாசக் கேள்வியையும் முரண்படுத்துகிறார் (கலாத்தியர் 3:5). நியாயப்பிரமாணத்திற்கும், கிருபைக்குமுள்ள வித்தியாசத்தை அவர் அடிப்படையாக காட்டுகிறார் (கலாத்தியர் 5:4).

விசுவாசத்தின் மூலமே கிருபையை பெற்றுக்கொள்ள முடியும் என்று வெகு தெளிவாக ரோமரில் காட்டியுள்ளார் (ரோமர் 4:6). எல்லா விசுவாசமும் தேவ வார்த்தையைக் கேட்கிறதினாலேயே வருகிறது (ரோமர் 10:17). தேவ வசனத்தில் செலவிடுகிற நேரத்திலுள்ள வித்தியாசத்தினாலும், வார்த்தைக்குத் திறந்து கொடுப்பதில் வித்தியாசமான நிலைகள் இருப்பதாலும், இயற்கையிலேயே விசுவாசத்திலும் பல நிலைகள் உள்ளன. வேதம் விசுவாசத்தின் வெவ்வேறு உரிச்சொல்களை உபயோகப்படுத்துகிறது.

பெரிய விசுவாசம் (மத்தேயு 8:10)
விசுவாசம் இல்லாமை (மாற்கு 4:40)
நிறைந்த விசுவாசம் (அப்போஸ்தலர் 6:5)
பரஸ்பர விசுவாசம் (ரோமர் 1:11)
வல்லமையுள்ள விசுவாசம் (ரோமர் 4:21)
விசுவாச அளவு (ரோமர் 12:3)
விசுவாச விகிதம் (ரோமர் 12:6)
பலவீனமுள்ள விசுவாசம் (ரோமர் 14:1)
விசுவாசத்தின் உறுதி (கொலோசெயர் 2:5)
மிகவும் பெருகுகிற விசுவாசம் (2 தொசலோனிக்கேயர் 1:3)
மாயமற்ற விசுவாசம் (2 தீமோத்தேயு 1:5)
ஆரோக்கியமுள்ள விசுவாசம் (தீத்து 2:2)

இந்த வேதவாக்கியங்களிலிருந்து விசுவாசத்தின் பல நிலைகளை நாம் தெளிவாகக் காணலாம். விசுவாசம் கிருபையைக் கொண்டு வருகிறதினால், பல நிலைகளிலுள்ள விசுவாசம் பல நிலைகளிலுள்ள கிருபையைக் கொண்டுவரும். தேவ வார்த்தையின் மூலம் விசுவாசத்தை அதிகரிக்கவும், போஷிக்கவும் முடியும் (ரோமர் 10:17). அதேபோல, கிருபையையும், மிகவும் பெரியதும், விலை மதிக்கமுடியாததுமான வாக்குத்தத்தங்களாகிய தேவ வார்த்தையின் மூலம் அதிகரிக்கச் செய்ய முடியும் (2 பேதுரு 1:2–4). கிருபை, விசுவாசம் இவ்விரண்டையும் தேவ வார்த்தையின் மூலம் அதிகரிக்கவும், பெருக்கவும் செய்ய முடியும்.

### *மருத்துவர்களையும், மருந்துகளையும் குறித்து*

கிறிஸ்தவர்கள் உடன்படிக்கையிலுள்ள நன்மையாகிய சுகமாகுதலை ஆராய ஆரம்பிக்கும் போது, உடனடியாகவோ அல்லது காலந்தாழ்த்தியோ மருத்துவர்களையும், மருந்துக்களையும் குறித்துக் கேள்விகளைச் சந்திக்க வேண்டி வரும். கிருபையை சொந்தமாக்கிக் கொள்ளும் பல நிலையிலுள்ள விசுவாசத்தை நாம் பார்த்ததினால், ஒவ்வொரு நபரின் விசுவாச அளவையும்

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

நாம் மதிக்க வேண்டும். அவர்கள் தங்கள் சுகத்திற்காக, மருத்துவர்கள் மருந்துகள் மூலம் தேவனை விசுவாசிக்க இடங்கொடுக்க வேண்டும். ஒரு நபர் தன்னுடைய விசுவாச அளவை இன்னொருவர் மீது திணிப்பது தவறாகும்.

ஒரு நபர் தேவனுக்கு நெருக்கமாக நடப்பதின் மூலமும், வார்த்தையினாலும் பரிசுத்த ஆவியினால் முழுவதும் நிறைந்திருப்பதின் மூலமும், மருந்தின் தேவையில்லாமல் வாழலாம் என்று நான் விசுவாசிக்கிறேன். இந்தப் பகுதியில் உள்ள சில கொள்கைகளைப் பற்றி இந்த அஸ்திபாரத் தொடரின் 4ஆம் தொகுப்பில் காண்போம். ஒரு நபர், டாக்டர்களும் மருந்துகளும் தேவைப்படாத அளவிற்கு விசுவாசத்தில் வளர்ச்சியடைந்து விட்டால், முதலில் அவர் வியாதிப்படவே மாட்டார்.

ஆதி பெந்தெகொஸ்தேகாரர்களான ஜான் அலெக்ஸாண்டர் டோவி போன்றவர்கள் மருந்து எடுப்பதை தூஷணமாகவும், விசுவாசத்திற்கு எதிரிடையானதாகவும் கருதினார்கள். சில ஆதி பெந்தெகொஸ்தேகாரர்கள் அதை சூனியமாகவும் (மாந்திரீகம்) கருதினார்கள். இன்று, நவீனகால பெந்தெகொஸ்தேகாரர்கள் இன்னொரு எல்லைக்கு சென்று, தேவன் சுகமாக்கும் முக்கிய முறையாக மருத்துவத்தைக் கருதுகிறார்கள்; அது தோல்வியுற்ற பின்பு, தேவனிடத்திற்கு திரும்புகிறார்கள்.

இந்த இரண்டு ஒருபுற சாய்வு நிலைகளுக்கிடையில் நாம் ஒரு நடுநிலையைக் கடைப் பிடிக்க வேண்டும். இயேசு மருத்துவர்களை பரிந்துரைக்கவும் இல்லை வெறுக்கவும் இல்லை என்பதை கவனியுங்கள். மருத்தவர்களின் பணியையும், மனித குலத்தின் வியாதி நீங்க அவர்கள் ஆற்றும் கடின உழைப்பையும் நாம் பாராட்ட வேண்டும். மருத்துவர்களும், மருந்தும், தேவைப்படும் எல்லா கிறிஸ்தவர்களுக்கும் அவைகள் கிடைக்க வேண்டும். இயற்கையான முறையில் மருந்தின் மூலம் சுகத்தைத் தேடும் கிறிஸ்தவர்களுக்கு தேவன் எதிரானவரல்ல.

அதே நேரத்தில், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை புதிய உடன்படிக்கையின் நிறைவுக்குள் வரும்வரைக்கும் – கிறிஸ்துவின் சரீரத்திலுள்ள ஒவ்வொரு அங்கத்தினரும் சுகமாக்கப் பட்டு, முழுமையானவர்களாய், கறைதிரையற்றவர்களாய் இயேசுகிறிஸ்துவின் வருகைக்கு ஆயத்தமாகும் வரைக்கும், சுகத்தையும் ஆரோக்கியத்தையும் உள்ளடக்கிய இயேசுவின் புதிய உடன்படிக்கையை நாம் போதித்து அளிக்க வேண்டும்.

ஒரு நபர், இன்னொரு நபரைப் பார்த்து நான் இன்னும் மருந்து எடுக்க வேண்டுமா என்று கேட்டால், அநேகமாக அவர் எடுக்க வேண்டியிருக்கும். ஏனெனில் மருந்து வேண்டாம் என்ற அளவிற்கு அவருக்கு விசுவாசம் இருந்திருக்குமானால், அந்த வெளிப்பாடு அவருடைய இருதயத்திற்குள் இருந்திருக்கும், அவர் மற்றவர்களை கேட்டிருக்க மாட்டார். ஒரு நபர், மற்றவரைக் கேட்கும்போது, வேறொருவரின் விசுவாசத்தின் மீது முயற்சிக்கிறார். மக்களும் தாங்கள் 'நம்பியிருக்கிற' சுகம் கிடைக்கும் வரைக்கும் மருந்தை தூக்கி எறியவோ புறக்கணிக்கவோ கூடாது. மாற்கு 11:24ல் விசுவாசத்தை அப்பியாசிப்பதில் மூன்று காலங்கள் இருக்கிறது. நிகழ்காலம் – *நீங்கள் ஜெபம்பண்ணும்போது*, இறந்தகாலம் – *பெற்றுக்கொண்டோம் என்று விசுவாசியுங்கள்*, மற்றும் எதிர்காலம் – *அவைகள் உங்களுக்கு உண்டாகும். எதிர்கால செயல்முறை வெளிப்பாட்டிற்கு* ஆண்டவரை விசுவாசிக்கும்போது, அந்த செயல்பாடு இன்னும் உருவாகாதவரை நல்ல இயற்கை அல்லது மருத்துவ உதவி பெற்றுக்கொள்வதால் விசுவாசத்திற்கு எந்த தடையும் வராது.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

*கப்பற் சேத விசுவாசம்*

எப்படி ஒரு நபர் தன்னுடைய விசுவாச அளவை அறிந்து நிதானிக்க முடியும்? சில வேளைகளில் ஒரு நபர் தனக்கு விசுவாசம் உள்ளதாக மனதில் நம்பலாம். ஆனால், ஆவிக்குரிய பகுத்தறியும் வரத்தின்படி அவர்களுக்கு அந்த அளவு விசுவாசம் இல்லையென்பது தெளிவாகும். ஆர்வமும் உற்சாகமுமுள்ள இளம் கிறிஸ்தவர்கள், தங்கள் ஆர்வத்தினால் ஆவிக்குரிய கப்பற்சேதத்திற்கு உள்ளாவதை, எத்தனை தடவை வளர்ந்த ஆவிக்குரியவர்கள் எதிர்த்திருக்கிறார்கள்?

நிச்சயமாக, ஒவ்வொரு தனிப்பட்ட கிறிஸ்தவனும் தங்கள் சொந்த விசுவாச அளவை உண்மையாய் உயர்த்திக்கொள்ள, ஒரு வழி இருக்க வேண்டும். தேவனுக்கு நன்றி! பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, விசுவாசமும் நல்மனசாட்சியும் உடையவனாயிருப்பதின் முக்கியத்துவத்தைக் குறித்து எச்சரிக்கிறார் (1 தீமோத்தேயு 1:18). மாயமற்ற விசுவாசம் (வெறும் மூளை அறிவல்ல) நல்மனசாட்சியிலிருந்து பிறக்கிறது (1 தீமோத்தேயு 1:5). விசுவாசம் செய்யும் உள்ளான கிரியைகளும், எப்படி தேவ வார்த்தையின் மூலம் அது நம்முடைய ஆவியில் பகிர்ந்தளிக்கப்படுகிறது என்பதும் பரம இரகசியம். ஆனால், நாம் அந்த விசுவாசத்தின் இரகசியத்தைச் சுத்த மனசாட்சியிலே காத்துக்கொள்ள முடியும் (1 தீமோத்தேயு 3:9).

*நல்மனசாட்சியைக் காத்துக்கொள்ளுதல்*

சுகமாக்குதலுக்கு இது நேரிடையாக உபயோகமாகாவிட்டாலும், ஒன்று கொரிந்தியர் பதினான்காம் அதிகாரத்திலுள்ள பவுலின் போதனைகளை ஆராய்வோம். இங்கு காணப்படும் அதே கொள்கைகள் சுகத்திற்கும் மற்றும் விசுவாசத்தை செயல்படுத்த வேண்டிய மற்ற எல்லா பகுதிகளுக்கும் உபயோகமாகும். விக்கிரகங்களுக்குப் படைக்கப்பட்டதை சாப்பிடுவது அவருக்கு எந்த தீமையையும் செய்யாது என்று பவுல் விளங்கியிருந்தார் (1 கொரிந்தியர் 8:4, 8).

எனினும், அதே அறிவிற்கு கடந்து வராத அநேகர் இருக்கிறார்கள் (1 கொரிந்தியர் 8:7). இந்த மக்களுக்கு, அவர்கள் அறிவின் வளர்ச்சிக்குத்தக்கதாக அவர்கள் மனசாட்சியும் செய்படுகிறது. அவர்களுடைய மனசாட்சி பலவீனமாயிருக்கிறது என்று பவுல் சொல்கிறார், அர்த்தமென்னவெனில், சாப்பிடுவதற்கு அவர்களுடைய மனசாட்சி அவர்களை அனுமதிப்ப தில்லை (1 கொரிந்தியர் 8:7). பலவீனமுள்ள சகோதரன், பலமுள்ள சகோதரனைப் பார்த்து அவனும் சாப்பிடுவானானால், அவனுடைய மனசாட்சி புண்படும் என்று பவுல் சொல்கிறார் (1 கொரிந்தியர் 8:12).

வித்தியாசமான விசுவாச நிலைகளைக் குறித்து இங்கு ஒரு முன்மாதிரியான உதாரணம் இருக்கிறது. பலமுள்ளவனுடைய விசுவாசத்தினால், பலவீனமான சகோதரன் புசிக்கிறான்; தன் வாழ்க்கையில் கிடைத்த வெளிப்பாட்டினாலோ, அறிவினாலோ புசிக்கவில்லை. அவனுடைய விசுவாசம் அந்த அளவிற்கில்லாததினால் அவனுடைய மனசாட்சி சாப்பிட வேண்டாம் என்று சொல்லுகிறது. தன்னுடைய விசுவாச அளவிற்கு மீறி செல்லுவதால், அவனுடைய மனசாட்சி புண்படுகிறது. நம் ஒவ்வொருவருக்குள்ளும், நம்முடைய உண்மையான விசுவாச அளவைச் சுட்டிக் காட்டும் கருவியாக மனசாட்சி இருக்கிறது. நம்முடைய விசுவாச அளவிற்கு மிஞ்சி போகும்போது, நம்முடைய மனசாட்சி நம்மை எச்சரிக்கும்.

(இந்த காரியத்தில் மற்றவர்கள் என்னைத் தவறாய் விளங்கிக் கொள்ளுமுன், விக்கிரகங்களுக்குப் படைக்கப் பட்டவைகளைக் குறித்த மிகத் தெளிவானகாரியம்; ஒரு ஆசியனாக, ஆசியக் கலாச்சாரத்தில் பரிட்சையமுள்ளவனாக, நான் நினைப்பதென்ன வெனில், விக்கிரகங்களின் ஆரம்பத்தைக் குறித்த விழிப்புணர்வு இருப்பதால், விக்கிரகங் களுக்குப் படைக்கப்பட்டவைகளுக்கு விலகியிருப்பது ஞானமானது. அந்த வெறும் ஆகாரம் ஆவிக்குரிய வகையில் தீமை செய்யாது. தீமை செய்யாது!

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

ஆனால், விக்கிரகங்களோடு எந்தத் தொடர்பும் இல்லை என்கிற சாட்சிக்காக – 1 கொரிந்தியர் 10:20. மற்றும் மற்றவர்களுக்கு இடறல் உண்டாக்குவதை தவிர்ப்பதற்காக – 1 கொரிந்தியர் 10:28, 29, 33).

விசுவாசமும், மனசாட்சியும் ஒன்றாக சேர்ந்து வேலை செய்கிறது. மனதின் உடன்பாட்டினால், தங்கள் விசுவாச நிலைக்கு அப்பால் செல்பவர்கள், பவுல் சொல்லும் கப்பற்சேதத்தை அனுபவிப்பார்கள் (1 தீமோத்தேயு 1:19). வசனத்தை தியானிப்பதின் மூலம் விசுவாசத்தை கட்டி எழுப்பும் இரகசியத்தைக் கற்றுக் கொள்ளுங்கள். உடனடி விசுவாசம் உங்களுக்கு வராது (அது விசுவாச வரமாக இருந்தாலொழிய – அதை நாம் இந்தத் தொடர்ச்சியின் எட்டாவது தொகுப்பில் படிப்போம்) விசுவாசம் வளர நேரம் தேவைப்படுகிறது. வசனத்தை விதைக்க ஒரு காலமுண்டு மற்றும் அதை அறுக்க இன்னொரு காலமுண்டு.

நம்முடைய மனசாட்சி நமக்கு சாட்சியாயிருக்கிறது (ரோமர் 9:2). தன்னுடைய வாழ்க்கையை சுத்த மனசாட்சியுடன் வாழ்ந்தார் என்று பவுலுக்கு சாட்சியுண்டு (அப்போஸ்தலர் 23:1; 24:16). நாம் சுத்த மனசாட்சியோடு தேவனை சேவிக்க வேண்டும் (2 தீமோத்தேயு 1:4). உங்கள் வாழ்க்கையில் விசுவாச அளவின்படியே செயல்படுங்கள். தேவ வார்த்தையை தியானிப்பதன் மூலம் உங்கள் வாழ்க்கையில் விசுவாச அளவை அதிகப்படுத்துங்கள்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

## அத்தியாயம் 4

# சுகமாகுதலின் இரண்டு வாய்க்கால்கள்

புதிய உடன்படிக்கையில் சுகத்தைப் பெற்றுக்கொள்ள இரண்டு அடிப்படை வாய்க்கால்கள் இருக்கின்றன. ஒன்று, தன்னுடைய சொந்த விசுவாசத்தின் மூலம்; மற்றொன்று அபிஷேகத்தின் மூலம். நாம் சுகமாவது தேவனுடைய சித்தம். நாம் எப்படி சுகமாக்கப் படுகிறோம் என்பது தேவனுடைய தனிப்பட்ட உரிமை. நம்முடைய வாழ்வைக் குறித்த தேவனுடைய இறுதியான நோக்கம் தேவனுடைய தனிப்பட்ட உரிமையை நிர்ணயிக்கிறது.

மனிதர்கள் உடனே நடக்கும் காரியத்தில் விருப்பமுள்ளவர்களாக இருக்கிறார்கள். நம்முடைய வியாதியிலிருந்தும், அறிகுறிகளிலிருந்தும் உடனடியாக விடுதலை பெற விரும்புகிறோம். தேவன் நம்முடைய அறிகுறிகளில் மட்டுமல்ல, நம்முடைய முழு வாழ்க்கையைக் குறித்தும், எதிர்காலத்தைக் குறித்தும் அக்கறையுள்ளவராயிருக்கிறார். உதாரணமாக, ஒரு நபர் எதிர்காலத்தில் மற்றவர்களுக்கு சுகமளிக்கும் ஊழியக்காரனாக வர தேவன் விரும்பினால், அந்த நபருக்கு அபிஷேகத்தின் மூலம் அல்ல, அவருடைய சொந்த விசுவாசத்தின் மூலம் சுகத்தை அளிக்க தேவன் தெரிந்து கொள்ளலாம்.

### *தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் சுகமாகுதல்*

தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் சுகமாவது, வசனத்தில் நேரம் செலவிடுவதையும், மற்றும் விசுவாசத்தின் மூலம் செயல்பட்டு நோயின் அறிகுறிகள் இன்னும் இருந்தாலும், முழு சுகத்தைப் பெற்றுக்கொள்வதையும் உள்ளடக்கியது. சாதாரணமாக, குழந்தைகளும் புதிய கிறிஸ்தவர்களும் மற்றவர்களின் விசுவாசத்தின் மூலம் சுகமாக தேவன் அனுமதிக்கிறார். ஆனால், அவர்கள் ஆவிக்குரிய ஜீவியத்தில் வளர ஆரம்பிக்கும்போது அவர்கள் தங்கள் சொந்த விசுவாசத்தை செயல்படுத்த தேவன் எதிர்பார்க்கிறார்.

ஒரு சிறுவன் இளமையாகவோ அல்லது குழந்தையாகவோ இருக்கும்போது, நாம் அவனை இடங்களுக்குத் தூக்கிச் செல்கிறோம். அந்த குழந்தை வளர ஆரம்பித்து நடக்கக் கற்றுக் கொள்ளும்போது, அவன் தன்னிச்சையாக நடக்கும் வரைக்கும் நாம் அவனை அதிக நேரம் நடக்கவிடுகிறோம். இதைச் செய்வதின் மூலம் அந்தக் குழந்தையின் தசைகள் வளர்ச்சி அடைவதையும் அவன் சரீரம் வளர்ச்சியடைவதையும் உறுதி செய்துகொள்ளுகிறோம்.

நம்முடைய விசுவாச தசைகளும் கூட வளர்ந்து விருத்தியடைய வேண்டும். நமக்காக ஜெபிக்க நாம் மற்றவர்களைச் சார்ந்திருப்போமானால், நம்முடைய ஜெப வாழ்க்கை ஒருபோதும் விருத்தியடையாது. நமக்காக வேதத்தை வாசிக்க, நாம் மற்றவர்களைச் சார்ந்திருப்போமானால், நம்முடைய வசன வாழ்க்கை ஒருபோதும் விருத்தியடையாது. நமக்காக தேவனிடமிருந்து செய்திகேட்ட, நாம் மற்றவர்களைச் சார்ந்திருப்போமானால், தேவனோடு நெருக்கமான தொடர்பை நம்மால் ஏற்படுத்திக்கொள்ள முடியாது. எனினும் நம்முடைய கிறிஸ்தவ வாழ்க்கையின் ஆரம்ப நிலைகளில், நமக்காக ஜெபிக்கவும், வேதத்தை வாசித்து விளக்கவும், பரிசுத்த ஆவியானவரின் சத்தத்தைக் கேட்கக் கற்றுக் கொடுக்கவும் மற்றவர்களின் உதவி நமக்கு தேவை.

நாமே காரியங்களைச் செய்வதைவிட சார்ந்திருப்பது எப்பொழுதும் எளிமையானது. இதைப்போலவே சுகத்தையும் தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் பெற்றுக்கொள்வதைவிட அபிஷேகத்தின் மூலம் பெற்றுக்கொள்வது எளிது. தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் சுகத்தைப் பெற்றுக்கொள்ள தினமும் விசுவாசத்தோடு தேவ வார்த்தையைப் பிரயோகிக்க வேண்டும். சில வேளைகளில் நோயின் அறிகுறிகள் இன்னும் இருந்தாலும், அதை பொருட்டாக எண்ணாமல் தேவ வார்த்தையைக் கருத்தில் கொள்ள வேண்டும் (ரோமர் 4:19,20).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

## *தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் சுகத்தைப் பெற்றுக்கொள்ளும் முறைகள்*

தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் சுகத்தைப் பெற்றுக்கொள்வது விசுவாசத்தின் எல்லா அடிப்படைகளையும் உள்ளடக்கியது: படமாகப் பார்ப்பது, தியானிப்பது, அறிக்கையிடுவது மற்றும் வார்த்தையின் படி செயல்படுவது. அடிப்படையில் நம்முடைய இருதயமும், எண்ணங்களும், படமாகப் பார்ப்பதும், வார்த்தைகளும், செய்கைகளும் தேவவார்த்தையோடு ஒருமித்து இருக்க வேண்டும். கீழ்க்காணும் கொள்கைகள் மற்றும் முறைகளின் மூலம் தனிப்பட்ட விசுவாசத்தினால் சுகத்தைப் பெற்றுக்கொள்ளலாம்.

1. நம்முடைய வாழ்க்கையில் வசனத்தை தியானித்து ஜீரணிக்க வேண்டும் (நீதிமொழிகள் 4:20–23). தியானத்தை குறித்து கற்றுக்கொண்ட எல்லா கொள்கைகளும் இங்கும் பொருந்தும். அந்த வசனம், எழுத்தின்படியே நமக்கு ஜீவனும், உடலுக்கெல்லாம் ஆரோக்கியமுமாகும்.

2. சுகம் வெளியரங்கமாகத் தெரியுமுன்னரே, தேவனைத் துதித்து நன்றி செலுத்த வேண்டும். வாக்குத்தத்தங்கள் நிறைவேறுமுன்னரே ஆபிரகாம் தேவனுக்கு மகிமையைச் செலுத்தினான் (ரோமர் 4:21).

3. உபவாசத்துடன், தேவ பிரசன்னத்தில் நேரம் செலவிட வேண்டும் (ஏசாயா 58:6–8). சரியான மனப்பான்மையுடன் கூடிய சரியான உபவாசம் சுகத்தை சீக்கிரம் தளிர்க்கச் செய்யும்.

4. பரிசுத்த ஆவிக்குள் ஜெபம்பண்ணி, விசுவாசத்தின் மேல் நம்மைக் கட்டி எழுப்ப வேண்டும் (யூதா 20). அந்நிய பாஷையில் ஜெபிப்பது நம்முடைய பலவீனத்தில் நமக்கு உதவி செய்யும் (ரோமர் 8:26).

5. தேவ வார்த்தையின் படி செயல்படுவது. பேதுரு அந்த சப்பாணியின் கையைப் பிடித்து தூக்கிவிட்ட பின்புதான் அவனுடைய கால்களும் கரடுகளும் பெலன் கொண்டன (அப்போஸ்தலர் 3:7). அப்போஸ்தலர் பதினான்காம் அதிகாரத்தில் உள்ள சப்பாணியான மனிதனுக்கு விசுவாசம் இருந்தும், அவன் வார்த்தையின்படி செயல்படும் வரைக்கும் சுகம் கிடைக்கவில்லை (அப்போஸ்தலர் 14:10). வார்த்தையின் படி செயல்படும்போது, விசுவாசம் நம்முடைய இருதயத்தில் உள்ளதா என்பதை உறுதிபடுத்திக்கொள்ள வேண்டும் (நம்முடைய மனசாட்சி சாட்சி கொடுக்கும்). செயல்பாடு வருமுன், நம்முடைய இருதயத்தில் விசுவாசத்தை பகிர்ந்தளிக்கவும், உற்பத்தியாகவும் மற்ற எல்லாப் படிகளையும் எடுக்க வேண்டும். இருதயத்தில் விசுவாசம் இல்லாமல் செயல்படுவது நாசகரமானது. நமக்குள் இருக்கும் மனசாட்சிக்கு செவிகொடுத்தால், ஆவிக்குரிய கப்பற்சேதம் நமக்கு வராது.

## *அபிஷேகத்தின் மூலம் சுகம்*

அபிஷேகத்தின் மூலம் கிடைக்கும் சுகம் பொதுவாக உடனடியானதும், பார்க்கக்கூடிய ஒன்றுமாகும். சுவிசேஷங்களில், இயேசு ஊழியம் செய்த பிரதான வழி அபிஷேகமாகும். எனினும், புதிய உடன்படிக்கையில், சுகத்தைப் பெற்றுக்கொள்ள அது ஒன்று மட்டுமே வழியல்ல. இயேசுவானவர் ஐந்துவகை ஊழிய நிலைகளிலும், பரிசுத்த ஆவியானவரின் வரங்களோடு, அபிஷேகத்தின் மூலம் ஊழியம் செய்தார். தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் சுகமாகுதலும், உள்ளே இருக்கும் அபிஷேகத்தின் மூலமே வருகிறது.

அபிஷேகத்தின் மூலம் கிடைக்கும் சுகம் மேன்மையுள்ளதானாலும், அதை செயல்படுத்தக் கூடிய கொள்கைகள் இன்னும் இருக்கின்றன. அது தேவனுடைய மனம் போன போக்கைப் போல் மட்டும் செயல்படாது. ஏனென்றால், தேவன் கலகத்திற்கு தேவனாயிராமல் சமாதானத்திற்கு தேவனாயிருக்கிறார் (1 கொரிந்தியர் 14:33).

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

தேவன் பட்சாபாதம் உள்ளவரும் அல்ல (அப்போஸ்தலர் 10:34). எழுதப்பட்ட தேவ வார்த்தையில் உள்ள ஆரோக்கியமான கொள்கைகளின் அடிப்படையில் அபிஷேகம் செயல்படுகிறது.

சில வேளைகளில், அபிஷேகத்தினால் சுகம் பெற்றவர்கள், தங்களுக்கு தெரியும்படி எந்த விசுவாசத்தையும் செயல்படுத்தியிருக்கமாட்டார்கள். ஆனால், மற்றவர்கள் அவர்கள் சார்பில் விசுவாசத்தை அப்பியாசித்திருப்பதை நாம் எப்பொழுதும் காணலாம். இயேசு திமிர்வாதக் காரனின் நண்பர்களின் விசுவாசத்தைப் பார்த்தார் (மாற்கு 2:5). அந்த புறஜாதி ஸ்திரீயின் விசுவாசமே அவளுடைய மகளை விடுதலையாக்கிற்று (மத்தேயு 15:28). விசுவாசம் செயல்படுத்தப்படுவது ஒன்றின் மூலமே தேவன் கிரியை செய்கிறார். ஏனெனில், விசுவாச மில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம் (எபிரெயர் 11:6). விசுவாசமே தேவன் செயல்படும் முறை.

அபிஷேகத்தின் மூலம் சுகம்பெறுதலில் அடங்கியுள்ள சில கொள்கைகள் கீழே வருமாறு:

1. அபிஷேகம் செயல்பட்டுக் கொண்டிருக்கும்போது தொடர்பு வைத்துக் கொள்ள வேண்டும். சுகமாக்கும் அபிஷேகம் வெளிப்படுத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது நேரிடையாக அங்கிருப்பதின் மூலமோ அல்லது அபிஷேகிக்கப்பட்ட பொருள்களைத் தொடுவதின் மூலமோ இதைச் செய்யலாம். அவரிடத்திலிருந்து வல்லமை புறப்பட்டு எல்லாரையும் குணமாக்கினது (லூக்கா 6:19). இயேசுவின் வஸ்திரத்தைத் தொட்டதின் மூலம் வல்லமை புறப்பட்டது (லூக்கா 8:46, 47). பவுலின் உறுமால்களும், கச்சைகளும், வியாதியஸ்தர்களையும், பிசாசு பிடித்தவர்களையும் சுகமாக்கிற்று (அப்போஸ்தலர் 19:12).

2. விசுவாசமும், எதிர்பார்க்குதலும் உள்ள சூழ்நிலையில் இருக்க வேண்டும். யவீருவிற்கு கெட்ட செய்தி வந்தபோது, ‘விசுவாசம் மாத்திரம் உள்ளவனாயிரு’ என்று இயேசு உற்சாகப்படுத்திக் கொண்டிருந்தார் (மாற்கு 5:36). நகைத்தவர்களை வெளியே அனுப்பி, அவிசுவாசத்திலிருந்தும், இகழ்ச்சியிலிருந்தும் சூழ்நிலையை சுத்தம் செய்தார் (மாற்கு 5:40).

3. தேவனுடைய மனிதனை தேவனுடைய பிரதிநிதியாக ஏற்றுக்கொள்ள வேண்டும். இயேசுவே தன் சொந்த ஊரில் வல்லமையாக செயல்பட முடியவில்லை. ஏனெனில், அவர்கள் அவரை வெறும் தச்சனாகப் பார்த்தனர் (மாற்கு 6:3).

4. தேவ மனிதனின் வார்த்தைகளை தேவ வார்த்தையைப்போலவே ஏற்றுக்கொள்ள வேண்டும். (அது எழுதப்பட்ட தேவவார்த்தைக்கு ஒத்திருக்கும்போது மாத்திரமே) தெசலோனிக்கேயர் பவுலின் வார்த்தைகளை தேவ வசனமாகவே ஏற்றுக்கொண்டதினால், சுவிசேஷம் அவர்களிடத்திற்கு வல்லமையாக வந்தது (1 தெசலோனிக்கேயர் 1:5; 2:13).

5. பரிசுத்த ஆவியானவரின் அபிஷேகத்திலிருந்து வரும் கட்டளைகளின்படி செய்வதால் வரும் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டும். இயேசு சுகம் தேவைப்பட்டவர் களுக்கு இப்படிப்பட்ட கட்டளைகளைக் கொடுத்தார் ‘எழுந்து படுக்கையை எடுத்துக்கொண்டு நட’ (அ) ‘போய் ஆசாரியனுக்கு உன்னைக் காண்பி’ (மாற்கு 2:11; லூக்கா 17:14). யோவான் சுவிசேஷத்தில் வரும் குருடன் ஸீலோவாம் குளத்தில் கழுவின பின்னரே பார்வையடைந்தான் (யோவான் 9:11).

ஒரு நபர், அபிஷேகத்தின் மூலம் சுகமாக்கப்பட்டாலோ, அல்லது தேவ வார்த்தையிலுள்ள தனிப்பட்ட விசுவாசத்தின் மூலம் இரட்சிக்கப்பட்டாலோ, இன்னும் சுகமளிக்கிறவர் தேவன் தான். இயேசு கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தில் ஒரு பகுதியே சுகமாக்குதல். தேவனுடைய

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved. 

பெயர்களில் ஒன்று, அவர் நம்மை சுகமாக்குகிற தேவன் என்பதாகும் (யேகோவா ரஃப்பா). அவருடைய எல்லா சிருஷ்டிகளுக்கும் சுகமளித்தல் தேவனுடைய பூரண சித்தமாகும்.

© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.

*அத்தியாயம் 5*

# இயேசுவின் சுகமாக்கும் ஊழியம்

சுவிசேஷங்களில், இயேசுவின் வாழ்க்கையையும் ஊழியத்தையும் குறித்து வாசிக்கும் யாரொருவரும், இயேசுவின் சுகமாக்கும் ஊழியம்தான் 'கூட்டம் சேர்க்கிற' ஒன்று என்று பொதுவாக ஒத்துக்கொள்வார்கள். ஆனாலும், இயேசுவின் வாழ்க்கையிலும் ஊழியத்திலும் அவர் தேவ வார்த்தையை மக்களுக்கு எடுத்துச் செல்வதற்கே முக்கியத்துவம் கொடுத்தார். பிதாவினிடத்தில் அவர் ஏறெடுத்த ஜெபங்கள், பிதாவின் வார்த்தையை மக்களுக்கு கொண்டு செல்வதே அவரின் பணி என்பதை விளக்கிக் காட்டுகின்றன (யோவான் 17:13,14).

### *இயேசுவின் போதனை ஊழியம்*

அநேக நேரங்களில், மக்கள் சுகத்திற்காக அவரை நெருக்குகையில், அந்தக் கூட்டத்தினின்று தம்மைத் தனிமைப் படுத்திக்கொண்டு மக்களுக்கு போதிக்க இயேசு ஒரு படகைக் கேட்பார் (மாற்கு 3:9,10). உண்மையாகவே இயேசு போதிக்கிறவராகவும், குணமாக்குகிறவராகவும் சுற்றித் திரிந்தார் என்று வேதம் பலமுறை சொல்லுகிறது.

மத்தேயு 4:23 — பின்பு, இயேசு கலிலேயா எங்கும் சுற்றி நடந்து, அவர்களுடைய ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி சொஸ்தமாக்கினார்.

மாற்கு 1:39 — கலிலேயா நாடெங்கும் அவர்களுடைய ஜெப ஆலயங்களில் அவர் பிரசங்கம் பண்ணிக்கொண்டும், பிசாசுகளைத் துரத்திக் கொண்டும் இருந்தார்.

லூக்கா 5:17 — ஒருநாள் அவர் உபதேசித்துக் கொண்டிருக்கிற போது... குணமாக்கத்தக்க கர்த்தருடைய வல்லமை விளங்கிற்று.

இயேசுவின் குணமாக்கும் ஊழியம், அவருடைய போதனையோடும், உபதேசத்தோடும் பின்னிப் பிணைந்திருந்தது. மக்கள் ஒருவேளை இயேசுவின் போதனைகளை ஏற்றுக் கொள்ளாவிட்டால், இயேசுவின் சுகமாக்கும் ஊழியத்தைப் பெற்றுக்கொண்டு இருந்திருக்க முடியுமா என்பது சந்தேகம்தான். இயேசுவின் போதனையிலிருந்த சத்தியத்திற்கும், உண்மைக்கும், சுகமாக்கும் ஊழியம் சாட்சியாகவும், அத்தாட்சியாகவும் இருந்தது.

நானே உலகத்திற்கு ஒளியாயிருக்கிறேன் என்று இயேசு சொன்னார் (யோவான் 8:12). உடனே அவர் குருடருக்கு பார்வை கொடுத்தார் (யோவான் 9:1–5). நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன் என்று இயேசு சொன்னார் (யோவான் 11:25). அதன் பின்பு அவர் லாசருவை உயிரோடு எழுப்பினார் (யோவான் 11:43). ஐந்தாயிரம் பேரை போஷித்த பின்பு, ஜீவ அப்பம் நானே என்று இயேசு சொன்னார் (யோவான் 6:35).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.*

*பிரகடனப்படுத்துதலும் செய்து நிறைவேற்றுதலும்*

இயேசு தம்முடைய சீஷர்களை இரண்டிரண்டு பேராக அனுப்பின போது, அவர்கள் பரலோக ராஜ்யத்தைப் பிரசங்கிக்கவும், வியாதியுள்ளவர்களை சொஸ்தமாக்கவும் சொன்னார் (மத்தேயு 10:7, 8). எழுபது சீஷர்களும் அதே பணியோடு அனுப்பப்பட்டார்கள் (லூக்கா 10:9). இயேசு கொடுத்த சுவிசேஷம் என்னவென்றால் தம்மைப் பின்பற்றுகிறவர்கள் முதலில் பிரசங்கிக்கவும் பின்பு சுகப்படுத்தவும் வேண்டும் என்பதே (மாற்கு 16:15, 18). சுகமாக்குதல் பிரசங்கித்த வார்த்தையை உறுதி செய்வதாய் இருக்க வேண்டும் (மாற்கு 16:20).

சுவிசேஷத்தைப் பிரசங்கிப்பது, தேவன் அதை அடையாளங்களினால் உறுதிபடுத்த வழியை திறக்கிறது. பிலிப்பு சமாரியாவில் அதிசயங்களைச் செய்வதற்கு முன் பிரசங்கம் பண்ணினார் (அப்போஸ்தலர் 8:4, 5). சுவிசேஷத்தைக் கேட்டுக் கொண்டிருந்த ஒரு கூட்டத்தில், அற்புதம் செய்யும் ஒரு தருணம் கிடைக்கும் முன் பவுல் வசனத்தைப் பிரசங்கம் பண்ணிக்கொண்டு இருந்தான் (அப்போஸ்தலர் 14:9).

சுகமாக்கும் ஊழியம் பிரசங்க ஊழியத்தின் உறுதிப்பாடே ஆகும். சில இடங்களில் சுகமாக்கும் ஊழியம் வல்லமையாக இல்லாததற்கு காரணம், அந்த இடத்தில் வசனம் வல்லமையாக இல்லை. பாரம்பரியத்தையோ அல்லது அவிசுவாசத்தையோ தேவன் உறுதிப்படுத்துவதில்லை. அவர் தம்முடைய வார்த்தையை மாத்திரமே அற்புதங்களினாலும், அடையாளங்களினாலும் உறுதிப்படுத்துகிறார் (மாற்கு 16:20).

*அடையாளங்களின் முக்கியத்துவம்*

யூதர்கள் இயேசுவை எதிர்த்தபோது இயேசு அவர்களிடம், என் பிதாவின் கிரியைகளை நான் செய்யாதிருந்தால், நீங்கள் என்னை விசுவாசிக்க வேண்டியதில்லை என்றார் (யோவான் 10:37). எனினும், அவர்கள் நம்பக் கடினமாயிருந்தாலும், அவர் அவர்கள் மத்தியில் வல்லமையான கிரியைகளை செய்தபடியால், பிதா அவரில் இருக்கிறார் என்று இயேசு கிறிஸ்துவின் கிரியைகளைப் பார்த்து நம்பும்படி கேட்டுக் கொள்ளப்பட்டார்கள் (யோவான் 10:38).

நம்புவதற்கு கஷ்டப்பட்ட தம்முடைய சொந்த சீஷர்களிடம் இயேசு தம்முடைய கிரியை களையும், அற்புதங்களையும் வலியுறுத்தினார். அவர், என் கிரியைகளினிமித்தமாவது என்னை நம்புங்கள் என்றார் (யோவான் 14:11). வெளிப்படையாக, இயேசுவின் கிரியைகள் அவருடைய ஊழியத்தின் முக்கிய அம்சமாக இருந்தன.

அந்த பெரிய எருசலேமிலே புறஜாதி விசுவாசிகளைக் குறித்து மிகுந்த தர்க்கம் உண்டானபோது, வசனமும், பரிசுத்த ஆவியானவரால் செய்யப்பட்ட அற்புத அடையாளங்களும் பிரச்சனைக்கு முடிவுண்டாக்கியது. அங்கு கூடி வந்திருந்த யாவரும், பவுலினாலும், பர்னபாவினாலும் செய்யப்பட்ட அற்புத அடையாளங்களைக் கண்டு கேட்டார்கள் (அப்போஸ்தலர் 15:12). இதற்கு முன்பாக உண்டான தர்க்கத்தை ஒப்பிடும்போது; பவுலும் பர்னபாவும் பகிர்ந்து கொள்ளுகையில் அவர்கள் அமைதியாக இருந்ததைக் காண்க (அப்போஸ்தலர் 15:7, 12). அது எழுதப்பட்ட வேத வாக்கியங்களுக்கு ஒத்திருக்கிறது என்று யாக்கோபு குறிப்பிட்டுக் காட்டுகிறார் (அப்போஸ்தலர் 15:15). அவர்களுக்கும் பரிசுத்த ஆவியானவருக்கும் அது நலமாகக் கண்டது (அப்போஸ்தலர் 15:28).

கிறிஸ்தவம் என்பது எப்போதுமே இயற்கைக்கு அப்பாற்பட்ட விசுவாசமாயிருந்திருக்கிறது. அந்த இயற்கைக்கு அப்பாற்பட்ட அம்சத்தை நீக்கிவிட்டால், ஒரு செத்த மதமே மிஞ்சியிருக்கும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

என் பேச்சும் என் பிரசங்கமும் மனுஷ ஞானத்திற்குரிய நயவசனமுள்ளதாய் இராமல், ஆவியினாலும் பெலத்தினாலும் உறுதிப்படுத்தப்பட்டதாய் இருந்தது என்று பவுல் சொல்லுகிறார். (1 கொரிந்தியர் 2:4). இயேசுகிறிஸ்துவினுடைய சுவிசேஷம், அற்புத அடையாளங்களோடும், பல வகையான அதிசயங்களோடும், பரிசுத்த ஆவியானவரின் வரங்களோடும் ஒவ்வொரு முறையும் பிரசங்கிக்கப்பட்டது என்பதற்கு தேவனே சாட்சியாயிருக்கிறார் (எபிரெயர் 2:4; 1 தெசலோனிக்கேயர் 1:5).

### *இயேசுவின் ஊழியத்தில் உள்ள திறவுகோல்*

இயேசுவின் சுகமாக்கும் ஊழியத்தை கவனிக்கும்போது, சுகமாக்கும் அபிஷேகத்தை விடுவிக்க அவர் வித்தியாசப்பட்ட முறைகளை உபயோகித்ததை காணலாம். சில வேளைகளில் அவர் தொட்டார் (மத்தேயு 8:3). சில நேரங்களில் உமிழ் நீரினால் சேறுண்டாக்கி கண்களின் மேல் பூசினார் (யோவான் 9:6). மற்ற நேரங்களில் அவர் வெறும் ஒரு வார்த்தையை பேசினார் (மத்தேயு 8:16).

மெய்யாகவே, ஒவ்வொரு தனிப்பட்ட சுகமளிக்கும் சம்பவத்திலும் இயேசு வார்த்தைகளையே பேசினார். ஒரு வார்த்தையையும் பேசப்படாதது போன்ற சம்பவத்திலும், எல்லா சுவிசேஷங்களையும் சேர்த்துப் பார்த்தால், இயேசு ஏதாவது பேசினதாக இருக்கும். இயேசு பேதுருவின் மாமியை தொட்டு சுகப்படுத்தினதாக மத்தேயு பதிவு செய்திருக்கிறார் (மத்தேயு 8:15). ஆனால், லூக்கா இயேசு ஜுரத்தை கடிந்து கொண்டதாக பதிவு செய்திருக்கிறார் (லூக்கா 4:39). ஒவ்வொரு சுகமாக்கும் சம்பவத்திலும் இயேசுவின் முறைகள் மாறியிருந்தாலும், அநேகமாக எல்லா சுகமாக்கும் சம்பவத்திலும், அவர் தம்முடைய பேசப்பட்ட வார்த்தைகளை விடுவித்தார்.

இயேசு பேசிய வார்த்தைகளே எல்லா சுகமாக்குதலுக்கும் பின்பாக உள்ள திறவுகோல். அவருடைய வார்த்தைகள் ஆவிக்குரிய வல்லமையை வெளிப்படுத்துவதாயிருந்தன (யோவான் 6:63). காற்றும் அலைகளும் கூட அவருடைய பேசப்பட்ட வார்த்தையின் வல்லமைக்கு எதிர்த்து நிற்க முடியவில்லை (மாற்கு 4:39).

பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பதாக டெமாகிரிட்டஸ் என்பவர், எல்லா பொருட்களும் அணுக்களினால் ஆனது என்பதைக் கண்டுபிடித்தார். ஆல்பர்ட் ஐன்ஸ்டீன் சமீபத்தில் வந்து எல்லா பொருட்களும் சக்தியினாலானது என்பதைக் கண்டுபிடித்தார். ஆனால், தேவன் தம்முடைய வசனத்தில், எல்லாப் பொருட்களும் தம்முடைய வார்த்தையிலிருந்து உண்டானது என்பதை தெரிவித்திருக்கிறார் (எபிரெயர் 11:3). ஆதியாகமம் முதலாம் அதிகாரத்தில், பேசப்பட்ட வார்த்தைதான் இந்த பிரபஞ்சத்தை கொண்டு வந்தது. இயேசு வந்து, தம்முடைய வார்த்தையால் சுகத்தைக் கட்டளையிட்டபோது, இந்த பூமியை உருவாக்கின அதே வல்லமைதான் வெளிப்பட்டது.

### *வெவ்வேறு அபிஷேகத்துக்கான வெவ்வேறு முறைகள்*

தன்னுடைய சொந்த ஊரில் விசுவாச நிலை அற்பமாயிருந்தபடியால், இயேசு வியாதியஸ்தர் மேல் கைகளை வைத்தார் (மாற்கு 6:5). விசுவாசம் அதிகம் உள்ளவர்களுக்கு தொடுதல் குறைவாகத் தேவைப்பட்டது. நூற்றுக்கதிபதி, தன்னுடைய வேலைக்காரனுடைய சுகத்திற்கு வந்தபோது, 'நான் வந்து சுகமாக்குவேன்' என்று இயேசு சொன்னார். சுகம் தேவைப்படுகிற வேலைக்காரனுக்கு அருகில், தாமே இருக்க வேண்டுமென்று இயேசு விரும்பினார்.

எனினும் அந்த நூற்றுக்கதிபதி இயேசுவின் பேசப்பட்ட வார்த்தைகளின்மேல் அதிக விசுவாசம் வைத்திருந்தான், எனவே அவனுக்கு தேவைப்பட்ட அந்த வார்த்தையை இயேசு பேசினார். இயேசு அவனுடைய விசுவாச நிலையைக் குறித்து ஆச்சரியப்பட்டார் (மத்தேயு 8:10). அந்த வேலைக்காரனைத் தொடாமலும் கூட, இயேசு தம்முடைய வார்த்தையின் மூலம் சுகத்தை விடுவித்தார் (மத்தேயு 8:13).

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 

பிரத்தியட்சமாக, இயேசு மக்களுடைய விசுவாச நிலைக்குத் தக்கதாக, அவர் உபயோகித்த முறைகளையும் மாற்றியமைத்திருக்கிறார். முறைகள் எதுவானாலும், இயேசுவால் பேசப்பட்ட வார்த்தைகளே சுகமளித்தலில் முக்கிய காரணியாகும். அவருடைய வார்த்தையில் ஜீவனும், சுகமும், வல்லமையும் இருக்கிறது.

இயேசுவின் எல்லா சுகமளித்தலிலும், வார்த்தைக் காரணியே, மாறாத காரணியாகும். இயேசுவின் சுகமாக்கும் ஊழியத்தில் முக்கியமான திறவுகோல் இதுவே என்ற பாதுகாப்பான முடிவுக்கு நம்மால் வரமுடியும். முழு செயல்முறை திட்டப்பட்டியலிலும் இது மாத்திரமே மாறாததாகும்.

*© Copyright 2008 Peter Tan Evangelism. All rights reserved.* 